**கவனிக்க.**- *2015.10.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1938 - 2015 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2015.10.23

*1938 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1610 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1611 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

விடுதிக் காப்பாளர் ஆண்/பெண் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

(வெற்றிடங்களின் எண்ணிக்கை 2 ஆகும்)

விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தில் விடுதிக் காப்பாளர் ஆண்/பெண் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 ***கல்வித் தகைமைகள் :***

1.1.1 சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் (6) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

1.1.2 கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலேனும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 ***தொழில்சார் தகைமைகள்.***- களத்தில் பெற்றுள்ள தொழில்சார் தகைமைகள் விசேட தகைமைகளாகக் கருதப் படும்.

1.3 ***அனுபவம்.***- அரசாங்க அல்லது அதனுடன் இணைந்துள்ள விடுதியகத்தில்/நிறுவனத்தில் உதவி மாணவர் விடுதி அதிகாரி/உதவி விடுதிக் காப்பாளர் அல்லது அதற்குச் சமமான உயர் பதவியில் இரண்டு (2) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

1.4 ***உடற்தகைமைகள்.***- எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை யில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் இயன்றவாறு போதியளவு உடல் உள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.5 விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

2. ***சம்பள அளவுதிட்டம்.***- ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - 22,040 ரூபா (MN-1-2006A)

3. **பொதுவான நிபந்தனைகள் :**

3.1 ***வயதெல்லை.***- 2015.07.01 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

3.2 ***ஆட்சேர்ப்பு முறை :***

3.2.1 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரி களிடமிருந்து பொது நிர்வாகச் சுற்றறிக்கை 15/90 இல் விதிக்கப்பட்டுள் ஏனைய எல்லா நிபந்தனைகளுக்கும் அமைவாக உரியவாறு நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சை சபையால் நடாத்தப்படும் கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை மூலம் தகைமையுள்ள நபர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

3.2.2 ***சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.***- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும். விதவைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

3.2.3 ***சேவை நிபந்தனைகள்.***- தாபன விதிக்கோவையில் அத்தியாயம் II இல் 10-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையதாகும்.

3.2.4 விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.11.06 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக் கூடியவாறு, “பணிப்பாளர் நாயகம், விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களம், இலக்கம் 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 7” எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

3.2.5 விண்ணப்பதாரிகளால் விண்ணப்பங்கள் வைத்து அனுப்பிவைக்கும் கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் “விடுதிக் காப்பாளர் (ஆண்/பெண்) பதவி - 2015” எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் எல்லா வகையிலும் பூர்த்திசெய்யப் படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களை அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பங்கள் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அஞ்சலில் காணாமல் போதல் தொடர்பாகச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பங்கள் அனுப்பி வைக்காது தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நட்டத்தை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது.

3.2.6 விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானதென அறியவந்தால் அல்லது விண்ணப்பதாரி வேண்டுமென்றே ஏதேனும் முக்கிய மான விடயத்தை மறைத்திருப்பதாக அறியவந்தால் அல்லது தகைமையற்றவர் எனச் சேவையாற்றும் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் உறுதிப்படுத்தப்பட்டால் அவர் பணி நீக்கம் செய்வ தற்கு உள்ளாவார்.

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்.

விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்,
இலக்கம் 9, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7,
2015, ஒற்றோபர் 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தில் விடுதிக் காப்பாளர் ஆண்/பெண் பதவி**

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களினால் அழைக்கப்படும் பெயர்கள் :----.
2. (i) சொந்த முகவரி :----.
   (ii) பால் (ஆண்/பெண்) :----.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
4. பிறந்த திகதி :

   ஆண்டு ---- மாதம் ---- திகதி ----.
5. 2015.07.01 ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் ----- மாதங்கள் ---- நாட்கள் ----.
6. (i) கல்வித் தகைமைகள் :----.
   (ii) தொழில்சார் தகைமைகள் :----.
   (iii) உரிய துறையின் அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.
7. தொலைபேசி இல. :

   நிலையான :---- ;     கையடக்க :----.
8. நீங்கள் நீதிமன்றத்தில் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? (ஆம்/இல்லை) :
   ஆம் எனில் விபரம் குறிப்பிடவும் :----.
9. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்** :

   (i) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானது எனவும், சரியானது எனவும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன்.

   (ii) என்னால் வழங்கப்பட்டுள்ள இக்கூற்றுகள் பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால் நான் நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவராக்கப்படுவேன் எனவும், நியமனம் பெற்றதன் பின்னர் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டால் பணி நீக்கம் செய்வதற்கு ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-776

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**நிலையான அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் அமைச்சு**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் சாராத பிரிவு 2 சேவை வகைக்குரிய கட்டண அறவீட்டு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழியங்கும் பின்வரும் பூங்காக்களில் நிலவும் கட்டண அறவீட்டு உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 **வெற்றிடம் நிலவும் சேவை நிலையங்கள் :**

| | | |
|---|---|---|
| (i) | கம்பஹா தாவரவியல் பூங்கா | – ஹெனரத்கொட, கம்பஹா |
| (ii) | ஹக்கல தாவரவியல் பூங்கா | – ஹக்கல, நுவரெலிய |
| (iii) | உலர் வலய தாவரவியல் பூங்கா | – மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை |
| (iv) | ஈர வலய தாவரவியல் பூங்கா | – சீதாவக்க, அவிசாவலை |
| (v) | அரச தாவரவியல் பூங்கா | – பேராதனை |

1.2. **பதவிக்கான கடமைகள்.**- தாவரவியல் பூங்காக்களைப் பார்வையிட வருகை தருவோருக்கான உரிய நுழைவுக் கட்டணங்களை சரியாக அறவிடலும் அதற்காக உரிய நுழைவுச்சீட்டை விநியோகித்தலும், ஏனைய கட்டணங்களை அறவிடல் மற்றும் கட்டணப் பட்டியல்களை விநியோகித்தல், அனுமதிப் பத்திரங்கள், கட்டணப் பட்டியல்கள் மற்றும் நிதி தொடர்பான ஆவணங்களை உரிய முறையில் பேணுதல்.

2. **சேவை நிபந்தனைகள்.**- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ்வரும் நிபந்தனைகளுக்கிணங்க உரிய சேவைப் பிரிவின் III ஆம் வகுப்புக்கு சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும்.

(ii) நியமனம் செயற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 3 வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டது.

(iii) தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியல் யாப்பு, அரச கரும மொழிக் கொள்கை, தாபன விதிக்கோவை, நிதிச் சட்டங்கள், திணைக்களக் கட்டளைகள், ஏனைய அரசாங்க சுற்று நிருபங்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தற்போது நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட முடியுமான திருத்தங்கள் உள்ளிட்ட சட்ட திட்டங்களுக்கும் நியதிச் சபைகளின் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டுக் காரியமாற்ற வேண்டும்.

(iv) III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் 4 ஆவது சம்பளப் படிநிலையை அடைவதற்கு முன்னர் I ஆவது வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(v) அவ்வாறே, 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி இரண்டாவது அரச கரும மொழியிலான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

*3. சம்பளப் பிரிவும் அளவும் :*

06/2006 (iv) ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி, சம்பளப் பிரிவு – MN - 01 - 2006A

சம்பள அளவு – (மாதாந்தம்) ரூபா 13,120 - 10 x145 - 11 x 170 - 10 x 240 – 10 x 320 – 22,040 ரூபா.
(இதற்கு மேலதிகமாக, அரசாங்கம் அனுமதித்த கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

*4. தகைமைகள் :*

*4.1 கல்வித் தகைமைகள் :*

(i) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு பாடங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ii) க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் குறைந்தது பிரதான பாடங்களில் ஒன்றிலாவது (1) (பொதுச் சாதாரணப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

4.2 ***வயதெல்லை***.- விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*4.3 வேறு தகைமைகள் :*

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றவும் பதவியின் பொறுப்புக் களையும் கடமைகளையும் நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(ii) இலங்கைப் பிரசைகளாயிருத்தல் வேண்டும்.

(iii) நன்னடத்தை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

(iv) பதவியில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு அவசியமான தகைமைகளை விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகும்போது சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான ஒழுங்குகள்**.- அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர். போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைவோரில் இருந்து வெற்றிடமாக உள்ள அளவைப் போல் இரண்டு மடங்கான எண்ணிக்கை கொண்டோர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதோடு, போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் புள்ளிகளின் அடிப்படையில் தகைமை ஒழுங்குக்கு ஏற்ப இருக்கும் வெற்றிடங்களின் அளவுக்கு ஏற்ற எண்ணிக்கையினர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

5.1 எழுத்துப் பரீட்சை – 100 புள்ளிகள்

பொது அறிவு, விவேகம் மற்றும் மொழி அறிவை மட்டிடுவதற்கான இணைந்த வினாப்பத்திரமொன்று. சித்தியடைதற்கான குறைந்த புள்ளிகள் 40% ஆகும்.

5.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை – 100 புள்ளிகள்

விண்ணப்பதாரியின் மேலதிக கல்வித் தகைமைகள், கணினி அறிவு, மொழித் தேர்ச்சி மற்றும் நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் ஆகியவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

5.3 பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

5.4 ***மொழி மூலம்***.- திறந்த போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- இவ்விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கேற்ப A4 (8 1/2" x 12") அளவு கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

6.1 ***பரீட்சைக் கட்டணம்***.- விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர், எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும், பேராதனை இலங்கை வங்கியில் உள்ள தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகத்தின் 0007040743 என்ற இலக்கம் கொண்ட கணக்கிற்கு 400 ரூபாவைச் செலுத்தி உரிய பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். (அதன் நிழற்படப் பிரதியொன்றை தங்களிடம் வைத்துக் கொள்ளல் சிறந்தது.)

6.2 விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :-

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு ;
(ii) க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைச் சான்றிதழ் ;
(iii) க. பொ. த. உயர் தரப் பரீட்சைச் சான்றிதழ் ;
(iv) பிறப்புச் சான்றிதழ்.

6.3 ***விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி***.- 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி .

6.4 ***விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி***.- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.11.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''கட்டண அறவீட்டு உதவியாளர் – போட்டிப் பரீட்சை'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

முகவரி :

பணிப்பாளர் நாயகம்,
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,
த. பெ. இல. 14,
பேராதனை.

6.5 உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் மற்றும் தேவையான அடிப்படைத் தகைமைகளைப் பூரணப் படுத்தியிராத விண்ணப்பதாரிகளது விண்ணப்பப் படிவங்களையும் முழுமையற்ற மற்றும் இங்கு குறிப்பிடப்பட்ட நிழற்படப் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங் களையும் போட்டிப் பரீட்சைக்கு முன்னதாகவே நிராகரிக்கும் அதிகாரம் பணிப்பாளர் நாயகத்துக்கு உரியதாகும்.

கலாநிதி. டீ. எச். பீ. பெரமுணகம,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் சாராத பிரிவு 2 சேவை வகைக்குரிய கட்டண அறவீட்டு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

(அலுவலகப் பாவனைக்கு)

1. பரீட்சை மொழி மூலம் :
   சிங்களம் - 01
   தமிழ் - 02

2. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்)
   Mr./ Mrs./ Miss :----.

   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :
   திரு./திருமதி/ செல்வி :----.

3. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (தமிழில்) :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. (i) நிரந்தர முகவரி :----.

   (ii) தபால் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

6. (i) பிறந்த திகதி :----.
   (ii) ---- ஆந் திகதியன்று வயது :

   வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. பால் :
   பெண் – 01
   ஆண் – 02

8. திருமணமானவரா ?
   திருமணமானவர் - 1
   திருமணமாகாதவர் - 2

9. தேசிய இனம் :
   (சிங்களவர் – 01, தமிழர் – 02, முஸ்லிம் - 03, வேறு – 04)

10. தொலைபேசி இலக்கம் :

11. கல்வித் தகைமைகள் :

   (i) க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை :
   வருடம் :----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

   (ii) க.பொ.த. உயர் தரப் பரீட்சை:
   வருடம் :----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

12. தற்போது செய்து கொண்டிருக்கும் தொழில் :----.
    தொழில் செய்யுமிடத்தின் பெயரும் முகவரியும் :----.

13. (i) நீர் ஏதும் குற்றமொன்றுக்கு நீதிமன்றமொன்றால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளீரா? : ஆம் / இல்லை.
    இருப்பின் விபரங்களைக் குறிப்பிடுக :----.

    (ii) அரச சேவைப் பதவியொன்றிலிருந்து பதவி நீக்கம் செய்யப் பட்டு அல்லது பதவியை விட்டுச் சென்றதாகக் கருதப்படும் நபரா என்பது பற்றிய விபரம் :----.
    ஆம்/இல்லை.

14. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :
    இலக்கம் :----.
    திகதி :----.
    வங்கி :----.

பற்றுச்சீட்டை ஒழுங்காக இங்கே ஒட்டவும்.

15. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவையும் சரியானவையுமாகும் எனவும் உரிய நிழற்படப் பிரதிகளை இணைத் திருப்பதாகவும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும், இப்பரீட்சை தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகவும், என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை யாக அமையும் பட்சத்தில் நான் பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது பதவிக்குத் சேர்த்துக்கொள்ளப்படவோ தகுதியற்றவனாக மாறும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எனது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப் பட அல்லது அபேட்சக நிலை தடைசெய்யப்பட நான் இணங்கு கின்றேன் என்றும் இந்நியமனம் சம்பந்தமான இறுதித் தீர்மானம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகத்துக்கு உரியது எனவும் ஏற்றுக் கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*16. அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்.*

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

*இவ்விண்ணப்பதாரியான திரு. /திருமதி /செல்வி ---- தற்போது இந்த நிறுவனத்தில் ------- ஆக நிரந்தர/தற்காலிக அலுவலராக பணிபுரிகின்றார் எனவும் அவரது பணி / வரவு / நடத்தை திருப்திகரமானது / திருப்தியற்றது எனவும் தெரிவிக்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இந்த நிறுவனத்தில் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.*

----,
*திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,*
*உத்தியோக முத்திரையும்.*

*திகதி :----.*

*10-834*

---

## கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்

*கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகைக்கூறு வெற்றிடங்களின் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் (திறந்த) - 2015*

*கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு மேற்படி சேவையின்கீழ் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.*

*1. வெற்றிடம் நிலவும் பதவிகள் :*

(i) *மேற்பார்வை அலுவலர்*
(ii) *தொழில்நுட்ப அலுவலர்*
(iii) *திட்டமிடவியலாளர்*
(iv) *கடல்சார் பொறியியல் உதவியாளர்*

***2. சேவை நிபந்தனைகள்.*** *- அரச சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள் மற்றும் பொது நிருவாகச் சுற்றறிக்கை 6/2006 இற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்ட* (MN-3-2006-A) *ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட பதவியின்* III *ஆந் தரத்தில் நியமிக்கப்படுவர்.*

*நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி போன்றவை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வெற்றிடங்களில் சிலவற்றையோ அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.*

*இந்த நியமனங்கள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.*

***3. சம்பளத் தொகுதி மற்றும் அளவுத் திட்டம்.*** *- சம்பள குறியீட்டு இல.* MN *- 03 - 06/2006-ஏ*

***சம்பள அளவுத்திட்டம்.*** *- ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885 ஆகும்.*

***4. கல்வித் தகைமை.*** *- தூயகணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல்/பொறியியல் தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பவியலுக்கு விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட இரு (2) பாடங்கள் உட்பட மூன்று (3) பாடங்கள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் ;*

*அத்துடன்*

*சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.*

***5. தொழில் தகைமை :***

(i) *மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய டிப்ளோமா ;*

*அல்லது*

(ii) *தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொறியியல் டிப்ளோமா ;*

*அல்லது*

(iii) *கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப் பட்ட உயர் பொறியியல் டிப்ளோமா ;*

*அல்லது*

(iv) *இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா ;*

*அல்லது*

(v) *இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப் படும் பொறியியலாளர் பரீட்சையில் 1 ஆவது பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் ;*

*அல்லது*

(vi) *தொழிலுக்கு சம்பந்தமான துறையில் தேசிய தொழிற் பயிற்சி தகைமை* (N. V. Q.) *இன் 6 ஆவது மட்டத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ;*

*அல்லது*

(vii) *உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில் நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து, அவைகளின் கருத்துரைகளைப் பெற்று மேற்படி தொழில்நுட்பத் தகைமைகள் சகல வகையிலும் சமமானதென தொழில் பயிற்சி ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில் நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.*

***6. அனுபவம்.*** *- ஏற்புடையதன்று.*

**7. தேகாரோக்கியம்.** *- இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் ஒருவர் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடற்தகுதியையும் மனோ வலிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

*8.* **ஏனைய தகைமைகள் :**

(i) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நற்குணம் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவியில் அமர்த்துவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட இறுதித் திகதிக்கு முன் அத்தகைமைகள் அனைத்தும் நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

*9.* **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*10.* **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை.**- எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எழுத்துப் பரீட்சைகளில் ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கும் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் வரிசைக் கிரம அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் :-

(அ) ஆட்சேர்ப்பதற்கான இந்தப் போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே நடத்தப்படும் ;

(ஆ) ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பதாரர் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழியின் மூலமே சகல வினாத்தாள்களுக்கும் விடை எழுத வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*11.* **எழுத்துப் பரீட்சை :**

| வினாப்பத்திரம் | காலம் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தி பெறுவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு மற்றும் பொது உளச் சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. தொழில் நுட்ப விடயம் சார்ந்த பரீட்சை | 2 மணித்தியாலங்கள் | 100 | 40% |

| வினாப்பத்திரம் | பாடவிதானம் |
|---|---|
| 1. நுண்ணறிவு மற்றும் பொது உளச் சார்பு | * கணித ஆற்றல், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பொது அறிவு ஆகிய தலைப்பின்கீழ் தயாரிக்கப்பட்ட விடயம் சம்பந்தமான குறுகிய விடையளிக்கும் வகையிலான வினாப் பத்திரம் |
| 2. பொதுப் பரீட்சை தொழில் நுட்ப மற்றும் விடயம் சார்ந்தவை | I ஆம் பகுதி.- சுற்றாடல், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், விஞ்ஞான அறிவு, சர்வதேச தகவல்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியது.<br>II ஆம் பகுதி.- விடயம் சார்ந்த வினாக்களை உள்ளடக்கியது. |

*12.* **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாக இருப்பதுடன், இக்கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில் 2323278 எனும் இலக்க கணக்கிற்கு வரவு வைப்பதற்கு ஏதுவாக செலுத்துதல் வேண்டும். பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரர் தம்முடன் வைத்திருப்பது உபயோகமானது. எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

*13.* **விண்ணப்பிக்கும் முறை.**- விண்ணப்பம் ஏ4 அளவிலான கடதாசியில் இந்த விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவம் 1 தொடக்கம் 2 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும், 3 தொடக்கம் 4.3 வரையானது இரண்டாம் பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் இருத்தல் வேண்டும்.

தற்போது அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை, தத்தமது திணைக்கள அல்லது நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பம் முடிவடையும் திகதிக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் பந்தியில் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட பெயருக்கோ அல்லது வேறு எந்தவொரு அலுவலரின் தனிப்பட்ட பெயருக்கோ பெயரிட்டு விண்ணப்பங்களை அனுப்புதல் கூடாது.

இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2015.11.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ "பணிப்பாளர் நாயகம், கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம், புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கிடைக்கும் பொருட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் III ஆம் தரம் - தொழில்நுட்ப சேவை வகைக்கூற்றில் சேர்த்துக்கொள்வதற்காக திறந்த போட்டிப் பரீட்சை - 2015" எனக் குறிப்பிடல் வேண்டும்.

இந்த விளம்பரத்துக்கு அமையாத விண்ணப்பங்கள் அல்லது முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத அல்லது காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் பற்றிய அல்லது அது சம்பந்தமான கடிதங்கள் தபாலில் தொலைந்துவிட்டது என்பன போன்ற முறைப்பாடுகள் எதுவும் கருத்திற்கொள்ளப்பட்ட மாட்டாது. எனவே குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ விண்ணப்பங்களை அனுப்புவது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

*14.* **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) விண்ணப்பப்படிவத்தை முறையாகப் பூரணப்படுத்தி இதற்கான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பம் முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பிய அனைத்து விண்ணப்ப தாரிகளுக்கும் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் முறையாகத் தமது கையெழுத்தை உறுதிசெய்து அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளை எவரேனுமொருவர் மீறினால், பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவார்.

*15.* **பரீட்சையின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை நிலைய பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்கலாம்.

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

*16.* **நியமனத்திற்காகத் தேர்ந்தெடுத்தல்**.- எழுத்து மூலமான பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களிடையே வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமாக எண்ணிக்கையான நபர்கள் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நியமனம் செய்யப்படுவர். பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. பதவிக்கும் பொருத்தமான அலுவலர்களை சேர்த்துக்கொள்வதற்கான தகைமை, சான்றிதழ்கள் மற்றும் ஆரோக்கிய நிலை ஆகியவற்றை பரிசீலனை செய்வதற்கு மட்டுமே.

*17.* **பொய்யான தகவல்களை வழங்குவது தொடர்பானது**.- எவரேனுமொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை யற்றவர் என்பது வெளிப்படின் பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது தெரியவரின் அவரது பரீட்சார்த்த நிலையானது செல்லுபடியற்றதாக்கப்படும். பரீட்சைக்குத் தரப்பட்ட தகவல்களில் ஏதேனும் முக்கிய விபரங்களைத் தன்னிச்சையாக மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். இந்த விதிமுறைகளை கவனத்திற்கொள்ளப்படாத நிகழ்வுகள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய மேற்கொள்ளப்படும்.

சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும் ஒரு மொழியில் முன் பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான விளம்பரமே மேலோங்கி நிற்கும்.

பணிப்பாளர் நாயகம்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10,
2015, ஒற்றோபர் 7.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்**

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகைக்கூறு வெற்றிடங்களின் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

| | |
|---|---|
| சுட்டிலக்கம் : (அலுவலக பாவனைக்கு மட்டும்) | ☐ |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி : சிங்களம்-2, தமிழ்-3 ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டுக்குள் குறிப்பிடவும்.) பரீட்சை மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள் |
| | (i) |
| | (ii) |
| | (iii) |

1. பெயர் :

1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) Mr./Mrs/Miss :----.
(உ-ம்- Mr. SILVA, A. B.)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (தமிழ்/சிங்களம்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (தமிழ்/சிங்களம்) :----.

2.3 உத்தியோக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2.4 உத்தியோக முகவரி (தமிழ்/சிங்களம்) :----.

2.5 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.6 தொலைபேசி இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. 3.1 பால் (ஆண்/பெண்) :
பெண் - 1
ஆண் - 0
(தொடர்புடைய இலக்கத்தைக் குறிப்பிடுக)

3.2 சமூக நிலை :
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2
(தொடர்புடைய இலக்கத்தைக் குறிப்பிடுக)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.4 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமை :

4.1 க. பொ. த. (உ. த.) தகைமை :
வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

| தோற்றிய பாடங்கள் | பெற்ற தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.2 க. பொ.த. (சா. த.) தகைமை :
வருடம் :----.
சுட்டிலக்கம் :----.

| தோற்றிய பாடங்கள் | பெற்ற தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

4.3 தொழில்சார் தகைமைகள் :

-----------------------------------------------------------
-----------------------------------------------------------
-----------------------------------------------------------
-----------------------------------------------------------

5. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :

(i) பற்றுச்சீட்டு இல. :----.
(ii) திகதி :----.
(iii) பணம் செலுத்திய அலுவலகம் :----.
(iv) செலுத்திய தொகை, ரூபா :----.

பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இங்கே ஒட்டவும்

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட தகவல்கள் யாவும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் சரியானது எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய .................. இலக்க ........................ ஆந் திகதி கொண்ட பற்றுச்சீட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளது எனவும் உறுதி கூறுகிறேன். இப்பரீட்சைக்குரிய சட்டதிட்டங்களுக்கு அமைய நான் தகைமையற்றவன் என பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது அபேட்சகத் தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதற்கு உடன்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பான இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்பதற்கும் நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் உள்ள அலுவலர்களுக்கு மட்டும்.)

திரு./ திருமதி/ செல்வி ....................................... எனும் பெயருடையவர் இந்த நிறுவனத்தில் ................................ பதவி வகிக்கிறார் என்பதாகவும், இன்றுவரை எச்சரிக்கை தவிர இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லை எனவும், அது சம்பந்தமான நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானம் எதுவும் இல்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

மேலும் இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானது எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

இவரைத் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போது இவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிப்பு செய்ய முடியும்/ முடியாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவி முத்திரை.

திணைக்களத் தலைவரின் பெயர் :----.
பதவி :----.
நிறுவனத்தின் பெயர் :----.
திகதி :----.

10-865

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள ஆரம்ப மட்ட - பகுதி தேர்ச்சிபெற்ற (PL02-2006A) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - நில அளவைக் கள உதவியாளர்கள்**

நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள ஆரம்ப மட்ட - பகுதி தேர்ச்சிபெற்ற (PL02-2006A) நில அளவைக் கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| 1.1 | ஆட்சேர்ப்புக்கான பதவி | ஆட்சேர்ப்புத் தரம் |
|---|---|---|
| | நில அளவைக் கள உதவியாளர் | தரம் III |

1.2 பதவிக்கான கடமைகளின் தன்மை :

| பதவிப்பெயர் | முக்கிய அலுவல்கள் |
|---|---|
| நிலஅளவைக் கள உதவியாளர் | * அளவை தொடர்பான பருவரைபடம்வரைய உதவுதல்<br>* அளவைப் புலப் புத்தகங்கள் மற்றும் கிடைப் படங்களைப் பயன்படுத்தி பழைய எல்லைகளை அவதானிப்பதற்கு ஏதுவாக அளவைக் கோடுகளை தயாரித்தல்<br>* அளவை தொடர்பான புலத்தில் முளைகளையும் எல்லைக் கற்களையும் திறந்து, நிறுவி அளவைக்காக தயார்ப்படுத்தல்<br>* நிலஅளவை தொடர்பான பீடக்குறிகளை இனங்காணவும் நிறுவவும் அளவையில் நில அளவையாளர்களுக்கு உதவுதல்<br>* களத்தில் அளவைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பேணவும், களஞ்சியப் படுத்தவும் உரிய பராமரிப்புப் பணிகளில் உதவுதல்<br>* தியோடோலைட்டுக்கள், மட்டங்கள் மற்றும் புதிய இலத்திரனியல் பூரணமாணிகள் அடங்கலாகச் செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்கு களத்தில் அளவைப் புள்ளிகளில் புவிசார் இடமறியும் முறைமை (GPS) உபகரணங்களை நிலைநாட்டல் |
| | * வான் ஒளிப்படப் பிடிப்பிற்குத் தேவையான புவிபார்த்த பார்வைப் புள்ளிகளை அமைப்பது தொடர்பான சகல கடமைகளிலும் உதவுதல்<br>* அளவைத் தரவுகளைச் சேகரிக்கவும் அளவைகளில் தெரிவுசெய்யப்பட்ட எல்லா இடங்களின் மையங்களையும் மட்டங்களையும் தீர்மானிப்பதற்குத் தேவையான இலக்குகளையும் அட்டவணைகளையும் முறையாகப் பேண உதவுதல்<br>* அளவை நடவடிக்கைகளில் சரியான தரவுகளைப் பயன்படுத்தி களத்தில் எல்லைக் கற்களையும் பீடக்குறிகளையும் நிறுவுதல் |

| பதவிப்பெயர் | முக்கிய அலுவல்கள் |
|---|---|
| | * புலவேலைப் புத்தகம் மற்றும் சுவடு வரைதல்களையும் பயன்படுத்தி பூர்வாங்க நடவடிக்கையாக காணித்துண்டுகளின் எல்லைக் குறியீடுகளை நிர்ணயிக்க உதவுதல்<br>* நில அளவையாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியினால் ஒப்படைக்கப்படும் நிலஅளவை தொடர்பான எந்தவொரு கடமையிலும் ஈடுபடுதல்<br>* நில அளவை கள உதவியாளர் தரத்தில் ஓவசியர் பதவி வகிப்போருக்கு மேற்குறித்த கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய நில அளவைக் கள உதவியாளர்களின் பணிகளை மேற்பார்வை செய்தலும் பொறுப்பாகும். |

2. நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3. **சம்பள அளவுத்திட்டம் :**

**அட்டவணை இல. 1**

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| III ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 12,210 |
| II ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 13,655 |
| I ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 15,120 |
| விசேட தரம் | மாதாந்தம் ரூபா 12,210 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - ரூபா 18,600 (PL - 2 - 2006A) | ரூபா 16,730 |

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கும் உரித்துடையதுமாகும். இந்நியமனம் 3 வருட தகுதிகாண் கால நிலைக்கு உள்ளாக்கப்படும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராயிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையின் பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

5. **தகைமைகள் :**

5.1 **கல்வித் தகைமைகள் :**

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 **தொழில்சார் தகைமைகள்.**- நில அளவைக் கள உதவியாளர் பதவிக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில் பயிற்சித் தகைமையில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாவது மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **ஆகக்குறைந்த நிபுணத்துவம் :**

(அ) நில அளவைக் களத்தை இனம்காண உதவுதல் ;

(ஆ) அளவை உபகரணங்களையும், கருவிகளையும் பாதுகாத்தலும் பராமரித்தலும்.

5.4 **உடல்சார் தகைமைகள்.**- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும், தேவையான உடல், உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 **ஏனையவை:**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான தகைமைகள் அனைத்தையும், விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.6 **வயது.**- விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிப்பவர்களுக்கு இவ்வுயர் வயதெல்லை ஏற்புடையதல்ல.)

6. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் விண்ணப்பதாரருக்கு தகைமை இல்லையெனத் தெளிவானால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரெனின் விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவலை அவர் அது பிழையெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனும் தகவலை வேண்டுமென்றோ மறைத்திருப்பது கண்டறியப் பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

7. **ஆட்சேர்ப்பு முறை.**- எழுத்துப் பரீட்சை மூலம்.

*பரீட்சைப் பாடத்திட்டம்.*- இப்பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்துமூலப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப்புள்ளி களின் அளவு | சித்தி எய்தப் பெற வேண் டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| 1. பொது அறிவு | 100 | 40% | 2 மணித்தியாலம் |
| 2. நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும் |

7.1 **பாட விதானம் :**

(i) *பொது அறிவு.*- இவ்வினாத்தாள் விண்ணப்பதாரர் தாம் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, சமய, பொருளாதார பின்னணியுடன் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான பொது விடயங்கள் தொடர்பாகப் பெற்றுள்ள அறிவைப் பரிசோதிப்பதாக அமையும் ;

(ii) *நுண்ணறிவு.*- இது விண்ணப்பதாரியின் சிந்திக்கும் ஆற்றல், அலசி ஆராயும் தன்மை, சமயோசிதமாக தீர்மானம் எடுக்கும் திறமை போன்றவற்றை அளவிடும் பல தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாளாகும்.

8. **தெரிவு முறை :**

8.1 நிலஅளவையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமை களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைச் சரிபார்ப்பதன் பொருட்டு மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பின்னர் எழுத்துப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் மாத்திரம் தரம் III இற்கான நிலஅளவைக் கள உதவியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

சேர்த்துக்கொள்ளப்படும் நில அளவைக் கள உதவியாளர் களுக்கு ஒரு மாத கால கள மற்றும் கோட்பாட்டுப் பயிற்சி நில அளவைத் திணைக்கள பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும்.

9. **விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் :**

(அ) இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 21 x 29 செ. மீ. (ஏ4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரர்கள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இல. 1 முதல் 6 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், இல. 7 முதல் 9.2 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், இல. 10 முதல் 14 வரையான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும், இல. 15 முதல் 16.2 வரையான தலைப்புக்கள் 4 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையின்கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங் களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின்கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றைத் தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக இல்லாத, உரிய தினத்திற்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுளை விண்ணப்பதாரர் களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ள தாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என விண்ணப்பதாரர் கவனித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடுகளும் கவனத்தில்கொள்ளப்பட மாட்டாது.

9.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியவர்கள் மாத்திரமே விண்ணப் பிக்கலாம். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி 2015.11.20 ஆந் திகதி தினத்தன்றோ, அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நிலஅளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்ப தாரர் இப்பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது இப்பதவிக்கான தகைமை உள்ளவர் என ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவோ கருதப்படக் கூடாது.

9.2 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஆரம்ப மட்டப் பகுதி தேர்ச்சி பெற்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு-நில அளவைக் கள உதவியாளர்'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

9.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்தில் உள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/2006 இன் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும். இத்தொகையைக் கொழும்பு 5, கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப் பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.**- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2015.11.20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் :

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை) ,
நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி யளிக்கப்பட மாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கெனப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) தபால் மா அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை ;

(iii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நிலஅளவையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைப் பிரகாரம் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட் டுள்ளனர்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2015, ஐப்பசி 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட - பகுதி தேர்ச்சிபெற்ற (PL 02-2006A) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - நில அளவைக் கள உதவியாளர்**

1. பரீட்சை சுட்டெண் : ☐
(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

2. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் : ☐
(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

3. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

3.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :----.
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. பால் : (ஆண் - M, பெண் - F) ☐

(தரப்பட்டுள்ள கூட்டினுள் குறியீட்டை இடவும்.)

7. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

7.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) :

மாவட்ட இலக்கம் : ☐

மாவட்டத்தின் பெயர் : ☐

7.2 எப்போதிலிருந்து அம்மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? : ----.

8. தொலைபேசி இலக்கம்:

நிரந்தர :----.
கையடக்க:----.

9. கல்வித் தகைமைகள்:

9.1 க.பொ.த. (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
முதலாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள்:
இரண்டாவது அமர்வு:

(i) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

10. தொழில்சார் தகைமைகள் (பெற்றுள்ள NVQ தகைமைகள் பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும்) :--------------------------------
-----------------------------------------------------------

11. ஏனைய தகைமைகள் :---------------------------------------
-----------------------------------------------------------

12. நீர் குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-

ஆம் ☐ இல்லை ☐

12.1 ஆம் எனில் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

13. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் ? :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.

14. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள தகவல்கள் இப்பிரகடனம் பொய்யான தென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) .......................... ரூபா செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

(உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளேன் எனவும் அவர் .................. ஆம் திகதி என் முன்னிலையில் மேலே 14 ஆம் பந்தியின்கீழ் கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கின்றேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:----.
பதவிப் பெயர்:----.
முகவரி----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)
திகதி:----.

16. **திணைக்களத் தலைவரின் சான்றுரை** :
(அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்)

16.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ உழைக்கவில்லை. எந்தவோர் ஒழுக் காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகி யுள்ளார்.

16.2 விண்ணப்பிப்பவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப் பட்டால் தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/விடுவிக்கப்பட முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 7.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ்வட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர்கள் | நகரங்களின்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலநறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

10-912

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் (திணைக்கள) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

## *Limited Competitive Examination for Recruitment to Assistant Commissioner (Department) of Department Probation and Child care Service - 2015*

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் (திணைக்கள) பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலமான பரீட்சை மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

இந்த நியமனம் அமுலுக்கு வரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) ***கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள் :***

* நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றைப் பெற்றுள்ளதுடன், வகுப்பு I இல் 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட முனைப்பான மற்றும் திருப்தி கரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள வெளிக்கள/அலுவலக வகுதியின் 2 ஆம் சேவை வகுதியைச் சேர்ந்த (MN 05-2006A) பதவியை வகிக்கின்ற நன்னடத்தை அலுவலர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

* அண்மித்த இறுதி ஐந்து வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) ***உடல்சார் தகைமை.***- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவ தற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவில் உடல், உள ரீதியான ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(iii) ***ஏனையன :***

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
* பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) ***வயதெல்லை.***- தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட் டுள்ளவர்கள் என்பதனால் வயதெல்லை ஏற்புடையதாவ தில்லை.

3. **சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகளும், சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகைகளைச் செலுத்த வேண்டும் ;

(ii) இந்த நியமனம் ஒரு வருட பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்பட்டதாகும். உதவி ஆணையாளர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு ஒழுங்கு முறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கு அமையவும், அது சம்பந்தமான ஏனையக சுற்றறிக்கைகளுக்கு அமையவும் இப்பதவியில் இணைந்து 5 வருட காலப் பகுதிக்குள் அரச கரும மொழி தொடர்பில் ஏற்புடைய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளை களுக்கும் இந்த நியமனம் கட்டுப்பட்டதாக இருக்கும்.

4. ***சம்பள அளவுத் திட்டம் :***

இப்பதவிக்கு ரூபா 22,935 - 10 - x 645 - 8 x 790 - 17 x 1,050 - 53,555 ரூபாவான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

(2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் SL 1-2006 சம்பள வகுதி)

5. **எழுத்துமூலப் பரீட்சை :**

(i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2016, பெப்புருவரி மாதம் கொழும்பில் இப்பரீட்சை நடாத்தப்படும் ;

(ii) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும் ;

(iii) விண்ணப்பதாரர் ஒருவர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எவ்வாறாயினும், அவர் தெரிவு செய்துகொள்ளும் ஒரு மொழியில் மாத்திரம் சகல பாடங்களுக்கும் தோற்ற வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தைப் பின்னர் மாற்றிக் கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது ;

(iv) எழுத்துமூலப் பரீட்சையானது பின்வரும் பாடங்கள் தொடர் பான வினாத்தாள்களைக் கொண்டதாகக் காணப்படும் :

| பாட இல. | பாடம் | நேரம் | உச்ச புள்ளி களின் எண் ணிக்கை | சித்தியடை வதற்குரிய புள்ளிகளின் எண் ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | விடய ரீதியான கற்கை | 1 1/2 மணித்தி யாலங்கள் | 100 | 40% |
| 2 | உளச் சார்புப் பரீட்சை | 1 மணித்தி யாலம் | 100 | 40% |

எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடவிதானம் :

(அ) ***விடய ரீதியான கற்கை.***- நன்னடத்தைத் துறை சம்பந்தமான கட்டளைச் சட்டங்களான சிறுவர் நலன்புரி மற்றும் அபிவிருத்தி, சிறுவர் பராமரிப்பு, சிறுவர் தவறாளிகளுக்குப் புனர்வாழ்வளித்தல், சிறுவர், இளைஞர் பற்றிய கட்டளைச் சட்டம், தவறாளிகளை நன்னடத்தையின் பொறுப்பில் வைத்தல் பற்றிய கட்டளைச் சட்டம், அநாதைச் சிறுவர் இல்லங்கள் கட்டளைச் சட்டம், சிறுவர்களைத் தத்தெடுத்தல் பற்றிய கட்டளைச் சட்டம், தண்டப் பணங்களைச் செலுத்துவது பற்றிய கட்டளைச் சட்டம், அலைந்து திரிதல் பற்றிய கட்டளைச் சட்டம் மற்றும் இளந்தவறாளிகளின் பயிற்சிக் கல்லூரிக் கட்டளைச் சட்டம் சம்பந்தமான செயன்முறை வினாத்தாள்.

(ஆ) ***உளச் சார்புப் பரீட்சை***.- விண்ணப்பதாரரின் ஆக்கபூர்வ மான சிந்தனை ஆற்றல், சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் மற்றும் பகுப்பாய்வு ரீதியான ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கான சுருக்க வினாப்பத்திரமாகும். இந்த வினாத்தாள் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிப்பதற்கான 50 வினாக் களைக் கொண்டதாக உள்ளதுடன், சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

*6*. ***கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை***.- கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக்குறைந்தது 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரமாகும். எனினும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரர் களின் எண்ணிக்கையானது நிரப்ப வேண்டியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று ஐந்து மடங்குக்கு மேற்படாததாக இருக்கும். நேர்முகப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் உரித்தாகும். எந்தவொரு காரணத்திற்காகவும் ஆகக்குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாது. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் புள்ளி வழங்கும் ஒழுங்குமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| விடயம் | உச்ச புள்ளி |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 2. குறித்த துறை தொடர்பாக பெற்றுள்ள தொழில்சார் தகைமைகள் | 25 |
| 3. சேவைசார் அனுபவம் | 40 |
| 4. மொழித் தேர்ச்சி | 10 |
| 5. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்து கின்ற திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்படிவத்தின், மாதிரி அமைப்புக்கு அமைய ஏ4 அளவான கடதாசியில் தயார் செய்து கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1 முதல் 8 வரை முதல் பக்கத்திலும், ஏனைய விடயங்களை அடுத்த பக்கங்களிலும் உள்ளடக்கும் வகையில் விண்ணப்பப் படிவத்தினைத் தயார் செய்து கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அபேட்சகர் தமது கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்து கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயார் செய்யப்படாத மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நீங்கள் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(ii) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழியிலேயே விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்தல் வேண்டும்.

(iii) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் "பரீட்சைகள் ஆணையாளர், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு 2015, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் (திணைக்கள) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015" எனத் தெளிவாகக் குறிப்பிட்டி ருத்தல் வேண்டும்.

(iv) சகல வகையிலும் பூரணமற்றதாக உள்ள விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போனதாக அல்லது தாமதமடைந்த தாக சமர்ப்பிக்கப்படுகின்ற எவ்வித முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(v) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படி வங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும்.

(vi) பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன், அதுபற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறுகின்ற தினத்துக்கு ஆகக்குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிச்சீட்டுக்கள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையிடம் வினவ வேண்டும். இவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தைச் சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவராயின், உங்களது மேற்படி விபரங்களுடன், அனுமதிச்சீட்டின் பிரதியைத் துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு, தொலைநகல் மூலம் அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படுகின்ற தகவல்களை உறுதி செய்வதற்காக நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்படப்

பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் அனுப்பும்போது பதிவு செய்தமைக்கான பற்றுச்சீட்டையும் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(vii) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிச் சீட்டிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் சான்றுப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். யாதாயினுமொரு நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி ஒருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவர் தத்துவமளித்துள்ள அலுவலர் ஊடாகவும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த திரண்ட சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க அல்லது நிரந்தர பதவிநிலை தரத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

*8.* **பரீட்சைக்குத் தோற்றல் :**

(i) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள சகலருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் அனுமதிச்சீட்டுக்களை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் தமது கையொப்பம் சான்றுப்படுத்திக்கொள்ளப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிச்சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படுவதில்லை. பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நிர்ணயித்துள்ள சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் கட்டுப்படுகின்றனர். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் குறித்த ஆள் உட்படுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் நாளன்று தமது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள் இந்த வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன.

**குறிப்பு**.- ஒரு விண்ணப்பதாரிக்கு அனுமதிச்சீட்டு வெளியிடப் படுவதன் மூலம் அவர் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பதாகக் கருதப்பட மாட்டாது.

*9.* **பரீட்சைப் பெறுபேறு**.- எழுத்து மூலமான மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமையின் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்ற பெறுபேறு அட்டவணைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளும் பெறுபேறுகளை தனிப்பட்ட வகையில் அனுப்ப அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத் தளத்தில் பகிரங்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*10.* **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். இத்தொகையை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்கக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகம் அல்லது உப தபால் அலுவலகத்திலும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் ஒரு பகுதியை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் உறுதியாக ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு**.- எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சையிலிருந்து வெளியேறுகின்ற அல்லது வருகை தராத அல்லது பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தகுதியற்றவராகும் யாராயினும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக் கட்டணம் முழுவதுமாக அல்லது அதன் ஒரு பகுதியை மீளப் பெற்றுக்கொள்ளும் உரிமை இல்லை.

*11.* **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையக்கூடியவாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆள் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

*12.* **பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்**.- நீங்கள் அனுப்புகின்ற விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினுமொரு தகவல் உண்மைக்கு மாறானது அல்லது தவறானது என்பது ஆட்சேர்ப்புச் செய்ய முன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் உங்களின் அபேட்சகர் அந்தஸ்து இரத்துச்செய்யப்படும். அவ்வாறான உண்மைக்கு மாறான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்படுமாயின் அது தொடர்பான உரிய நடவடிக்கைகளுக்கும் உட்பட்டு பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*13.* வெற்றிடங்களை நிரப்புகின்ற அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

*14.* இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத யாதாயினுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பான இறுதி முடிவு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவானதாக இருக்கும். மேலும் வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாதிருப்பது அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புவது பற்றிய இறுதி முடிவு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்தானதாகும்.

*15.* இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான வாசகங்களுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான உரையே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு.

5 ஆவது மாடி, 2 ஆம் கட்டிடத் தொகுதி,
"செத்சிறிபாய", பத்தரமுல்லை,
2015, ஒற்றோபர் 8.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்**

உதவி ஆணையாளர் (திணைக்கள) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

Limited Competitive Examination for Recruitment to Assistant Commissioner (Department) of Department Probation and Child care Services - 2015

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : (அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

(ii) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா :- GUNAWARDANDA, H. M. S. K.)

(iii) முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :----.

2. தற்போதைய சேவை நிலையமும், முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.)

3. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5. தொலைபேசி இலக்கம் :

6. (i) நீங்கள் தற்போது உரித்தாகின்ற சேவை/தரம் மற்றும் அதில் இணைந்து கொண்ட திகதி :----.
(ii) I ஆம் தரத்தின் சேவைக்காலம் :----.

7. 2015, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிக்கு அண்மித்த இறுதி ஐந்து வருடங்களில் சகல சம்பள ஏற்றங்களையும் நீங்கள் உழைத்துக் கொண்டுள்ளீரா ? உழைத்துக் கொள்ளாத சம்பள ஏற்றங்கள் காணப்படின் அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :----.

8. அண்மித்த இறுதி ஐந்து வருடங்களில் உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா, ஆமெனில், தவறு மற்றும் விதிக்கப்பட்ட தண்டனையின் தன்மை மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட திகதி ஆகியவற்றின் விபரங்களைக் குறிப்பிடுக :----.

9. பரீட்சைக் கட்டணம் :

(i) பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(ii) திகதி :----.
(iii) கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(iv) செலுத்தப்பட்ட தொகை :

பற்றுச்சீட்டின் ஒரு பகுதியை இங்கே உறுதியாக ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருக்கவும்.)

10. **விண்ணப்பதாரரின் சான்றுப்படுத்தல் :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு அமைய உண்மையானவை என்று தெரிவிக்கின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கு நான் கட்டுப்படுகின்றேன் என்றும் தெரிவிக்கின்றேன். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கு அமைய இணங்கி செயற்படுவதற்கும், இப்பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளுக்கு அமைய நான் தகுதியற்றவரெனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது அதனை நடாத்தும்போது அல்லது அதனை நடாத்திய பின்னர் எனது பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச் செய்வது தொடர்பாகவும் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **கண்காணிப்பு அலுவலரின் உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................................... என்பவர் தனது கையொப்பத்தை இந்த விண்ணப்பப்படிவத்தில் என் முன்னிலையில் பதிவுசெய்தார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
கண்காணிப்பு அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
இடம் :----.
திகதி :----.

12. **திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ................................... குறிப்பிட்டுள்ள தகவல்கள் இங்குள்ள சேவை அறிக்கைகளுக்கு அமைய சரியானவை என்றும், குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் என்றும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும், மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய நியமனமொன்றுக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை, தற்போது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையைப் பதிக்கவும்).

பெயர் :----.
பதவி :----.
இடம் :----.
திகதி :----.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியின் பின்னர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தை மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

10-936